செய்தி வெளியீடு எண்: 772 நாள்: 12.06.2024

# செய்தி வெளியீடு

## சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், அ.புதூர் ஊராட்சியில் நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த தூய்மைப் பணியாளரின் குடும்பத்திற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு.

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், அ.புதூர் ஊராட்சி, கந்தன்குட்டை செல்லும் வழியில் இன்று (12.06.2024) தூய்மைப் பணியில் ஈடுபட்டிருந்த திருமதி. கோவிந்தம்மாள் (வயது 65) க/பெ. பச்சமுத்து, திருமதி. சின்னப்பொண்ணு (வயது 66) க/பெ.முத்துசாமி மற்றும் திரு. சிவலிங்கம் (வயது 47) த/பெ. செல்லமுத்து ஆகியோர் மீது அடையாளம் தெரியாத நபர் ஓட்டிவந்த இருசக்கர வாகனம் எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் பலத்த காயமடைந்த திருமதி. கோவிந்தம்மாள் என்பவருக்கு மகுடஞ்சாவடி ஆரம்பச் சுகாதார நிலையத்தில் முதலுதவி அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி. சின்னப்பொண்ணு மற்றும் திரு.சிவலிங்கம் ஆகிய இருவருக்கும் சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த திருமதி. கோவிந்தம்மாள் அவர்களது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு அவர்களது குடும்பத்திற்கு ஐந்து இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu